மதுரை வடக்கு மாவட்டம் மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதி திமுக சார்பாக கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 73 வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை ஊமச்சிகுளத்தில் மாபெரும் இரட்டை மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தொடங்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் சி.சிறைச்செல்வன், நேரு பாண்டியன், வடிவேல் முருகன், வழக்கறிஞர் கலாநிதி, எம்.ஆர்.எம் .பாலசுப்ரமணியன், ஆசைக்கண்ணன், சோமசுந்தர பாண்டியன், அ.பா.ரகுபதி, வீரராகவன், பெ.சசிகுமார், மருது பாண்டியன், பாண்டியராஜன், அழகு பாண்டி, விஜய கதிரவன், வ.து.ந.ஆனந்த், சுப.த.சம்பத், எம்.இளங்கோ, எஸ்.ஆதிசங்கர், ஒத்தக்கடை சரவணன், கார்த்திக் ராஜா, நாகேந்திரன் என்ற ராஜேஷ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்றனர்

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் கிழக்கு, மேற்கு, தெற்கு ஒன்றிய திமுக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் மண்டல மாநாடு ஆலோசனை கூட்டம் என்.பஞ்சம்பட்டியில் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தி.மு.க.மாநில இளைஞரணி துணைச் செயலாளர் சி.ஆனந்தகுமார், கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச் செயலாளர் மு.பிலால்உசேன், ஒன்றிய செயலாளர்கள் இராமன், முருகேசன், இராஜேந்திரன் உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பாக மாமன்னர் திருமலை நாயக்கரின் 443 ஆம் ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை ஆரப்பாளையம் கிராஸ் ரோட்டில் அமைந்துள்ள அன்னாரது திரு உருவச் சிலைக்கு மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் பி.டி.மணிமாறன், முத்து கணேசன், ஏ.கே.ஆறுமுகம், வட்டச் செயலாளர் சுரேஷ், கழக நிர்வாகிகள் திராவிட மாரி, நேஷனல் சங்கர், தமிழக நாயுடு மகாஜன சங்க மாநில பொதுச் செயலாளர் சுருதி ரமேஷ் உள்ளிட்ட திரளான கழகத்தினர் மற்றும் பொதுமக்கள், நாயுடு மகாஜன சங்கத்தினர் பங்கேற்றனர்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் பணகுடி புண்ணியவாளன்புரம் மாதா கோவில் எதிரில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வள்ளியூர் வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் அலெக்ஸ் அப்பாவு ஏற்பாட்டில் பணகுடி பேரூர் செயலாளர் தமிழ்வாணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் திரைப்பட இயக்குனர் கரு.பழனியப்பன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.உடன் நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தொகுதி பார்வையாளர்கள் சுரேஷ் ராஜன்,சிவராஜ்,மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோஷல், நம்பி,முத்துராமலிங்கம்,அல்போன்ஸ், ஹரி கிருஷ்ணன்,ஆதிநாராயணன், சந்திரகலா,அனுராதா,பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன், சாந்தி சுபாஷ்,ஒன்றிய செயலாளர் கள் போர்வெல் கணேசன்,ஆரோக்கிய எட்வின்,சுடலைக்கண்ணு,ஜோசப் பெல்சி,ராஜன்,செல்வகருணாநிதி, கண்ணன்,சுபாஷ் தங்கபாண்டியன், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் மல்லிகா அருள்,தலைமைக் கழக பேச்சாளர்கள் உடன்குடி தனபால் சகாய பெபிலா மற்றும் கழகத்தினர் உள்பட 2000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.

4 மாவட்டங்களில் நடப்பாண்டில்

கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1 முதல் ஆரம்பம்!

அமைச்சர் அர.சக்கரபாணி வேண்டுகோள்!

சென்னை, பிப்.2- நடப்பாண்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் கேழ்வரகு கொள்முதல் நவம்பர் 1--ஆம் தேதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அம்மாவட்ட விவசாயிகள் கேழ்வரகினை மெட்ரிக் டன்ஒன்றிற்குரூ.48,860/- என்ற விலையில் நடப்பு ஆண்டு ஆகஸ்ட் 31 வரை நேரடி கொள்முதல் நிலையங் களில் விற்று பயன்பெற உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கேழ்வரகு கொள்முதல் செய்யும் திட்டம், கடந்த 2022-2023 கொள் முதல் பருவத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் முதற் கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு, 514 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

2023-2024 கொள்முதல் பருவத்தில் கூடுதலாக ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களைச் சேர்த்து, 4 மாவட்டங்களில் விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து நேரடியாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,889 மெட்ரிக்டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து, கடந்த 2024-2025 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்ட விவசாயிகளிட மிருந்து 4050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், நடப்பு 2025-2026 கொள் முதல் பருவத்தில் மெட்ரிக்டன் ஒன்றிற்கு குறைந்தபட்ச ஆதாரவிலையாக ரூ.48,860/- வழங்கப்படுகிறது.இது கடந்த கொள் முதல் பருவ குறைந்தபட்ச ஆதார விலை ரூ.42,900/- ஐ விட மெட்ரிக் டன் ஒன்றிற்கு ரூ.5,960/- கூடுதலாகும்.

மேலும், நடப்பு 2025-2026 -கேழ்வரகு கொள் முதல் பருவத்தில் 01.11.2025 முதல் 31.01.2026 வரை தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையம் திறந்து விவசாயி களிடமிருந்து கேழ்வரகு கொள்முதல் செய்ய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டது.தற்சமயம் தருமபுரி, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 9 நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதில், தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இது வரை 630.050 மெட்ரிக் டன் கேழ்வரகு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 351 சிறு குறு விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

மேலும், நடப்பு 2025--2026 கேழ்வரகு கொள்முதல் பருவத்தில் கேழ்வரகு விவசாயிகள் பயன் பெற ஏதுவாக, கேழ்வரகு கொள்முதல் கால வரம்பு 31/8/2026 வரை நீட்டித்து வழங்க தமிழ் நாடு அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டு, மேற் படி மாவட்டங்களில், நேரடி கேழ்வரகு கொள் முதல் தற்போது, 01.02.2026 முதல் 31.08.2026 வரை கால நீட்டிப்பு செய்து கேழ்வரகு கொள்முதல் செய்ய ஒன்றிய அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த அரிய வாயிப்பினைப் பயன்படுத்தி தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தாங்கள் விளைவித்த கேழ்வரகினைத் தமிழ் நாடுநுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் திறக்கப்படும் நேரடி கேழ்வரகு கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாட்டின் துணை முதல்வர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதியில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு தனது சொந்த நிதியில் இருந்து தொடர்ந்து வழங்கி வருகிறார் காதர் பாட்சா முத்து ராமலிங்கம். அந்தவகையில் மண்டபம் கிழக்கு ஒன்றியம் இடையர்வலசை ஊராட்சியில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நலத்திட்ட உதவிகளை வழங்கி திராவிட மாடல் ஆட்சியின் மகத்துவத்தால் வளர்ந்து வருகிற முகவை மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை எடுத்துக்கூறி திராவிட மாடல் ஆட்சி 2.0 மீண்டும் தொடர அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமென இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் இராமநாதபுரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் 30.01.2026 அன்று 4 வது பொதிகை புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார்,சட்டமன்ற உறுப்பினர்கள் ஈ.ராஜா (சங்கரன்கோவில்) பழனி நாடார் (தென்காசி) சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்) ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.உடன் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர்,ஒன்றியக் குழு தலைவர் ஷேக் அப்துல்லா,மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவி பால் ஆகியோர் உள்ளனர்.

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில்

பேரறிஞர் அண்ணா நினைவுநாள் அமைதிப் பேரணி

கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

மதுரை, பிப்.2- மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்மொழிஉயர்வுக்காகவும்,தமிழர்களின்மேம்பாட்டுக்காகவும்,தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர்-கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும்தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர்"பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு" வரும் *03.02.2026*செவ்வாய்க் கிழமை காலை 10.00மணியளவில்மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில்நெல்பெட்டையில் உள்ள"பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச்சிலைக்கு"மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படவுள்ளது.இந்நிகழ்ச்சியில்மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்ட கழக செயலாளர்கள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழகமுன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், அ.வேலாயுதபுரம் கிராமத்தில் ரூ.9.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக்கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார்.உடன் விளாத்திகுளம் வட்டார வளர்ச்சி அலுவலர் ரஞ்சித், கூட்டுறவு சார்பதிவாளர் முருகலட்சுமி, விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இமானுவேல், மாவட்ட பிரதிநிதிகள் ஆதிசங்கர், புதுராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் கிழக்கு ஒன்றியம் முத்துவயல் ஊராட்சி முத்துவயல் கிராமத்தில் தமிழ்நாடு அரசு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை திட்டம் குழந்தை நேயப்பள்ளி உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் 2024–2025 கீழ் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கணினி ஆய்வகம் ரூபாய் 15 லட்சம் மதிப்பீட்டில் மற்றும் முத்துவயல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூபாய் 39.95 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு வகுப்பறை கட்டிடத்தை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தலைமை ஆசிரியர், மற்றும் ஆசிரியர்கள், மற்றும் ஒன்றிய கழக செயலாளர் கே.கே. கதிரவன், அவைத்தலைவர் சிங்கராசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு உறுப்பினர் சுந்தரவடிவேலு, மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் பாதாள வைரவன், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கிருஷ்ணன், அரியகுடி மணி, ஒன்றிய நிர்வாகிகள், பொறியாளர் அணி முத்துவயல் மங்களேஸ்வரன், ஆதிதிராவிடர் அணி சேமனூர் சாத்தையா, வர்த்தக அணி தென்னவனூர் உதயகுமார்,பிரதிநிதி சாமிநாதன், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தமிழ் தாசன், குமரகுரு,ராமச்சந்திரன்,சேமனூர் தினேஷ்.ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் க. ரியாஸ் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.